**<u>2020 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31ம் தேதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள திண்டிவனம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டப் பொருள்</u>**

**முன்னிலை:- திருமதி.M.R.வசந்தி, M.A.,**
**தனி அலுவலர்**
**திண்டிவனம் நகராட்சி.**

**1)**இந்நகராட்சி வார்டு–1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் கட்டணம் நிலுவை காரணமாக துண்டிப்பு செய்யப்பட்ட குடிநீர் இணைப்புகளுக்கான குடிநீர் கட்டணம் மற்றும் மூங்கிலம்மன் கோயில் தெருவில் ரயில்வே பாலம் கட்டியதால் பகிர்மான குழாய் துண்டிக்கப்பட்டது,சீனுவாசன் தெரு,ஏரி கோடி தெரு ,ரொட்டிக்கார தெரு,பாரதிதாசன் தெரு,விவேகானந்தர் தெரு ஆகிய தெருக்களில் சீரான குடிநீர் விநியோகம் இல்லாததால் குடிநீர் கட்டணம் நிலுவை மற்றும் மாரியம்மன் கோயில் தெருவில் புதிய ரயில்வே லைன் அமைக்க வீடுகள் கையகப்படுத்தியதால் குடிநீர் கட்டணம் நிலுவை தொடர்ந்து வசூல் செய்ய இயலாமல் நிலுவை கேட்பாக ரூபாய் 14,64,118/- உள்ளது. எனவே மேற்கண்ட நிலுவை கேட்பை கேட்பு பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

2) அரசு ஆணை எண் : 103 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள் : 15.04.2010 ல் திண்டிவனம் நகராட்சி பகுதியில் நகர ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகர மன்ற தீர்மான எண் : 258 நாள் : 25.10.2010 ல் அனுமதித்துள்ள படியும் தமிழக அரசின் வழிகாட்டுதல் படியும் திண்டிவனம் நகரத்தின் தெற்கு பகுதியில் உள்ள பொது மக்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் வழங்குவதற்கு பொது சுகாதார துறையுடன் இணைந்து நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஜெயபுரம் பகுதியில் நகர ஆரம்ப சுகாதார நிலையம் 2011 ல் அமைக்கப்பட்டது. மேற்கண்ட நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்கள் மட்டுமின்றி அருகிலுள்ள கிராம பகுதியை சேர்ந்தவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு தற்போது சிறப்பாக செயல்பட்டு வருகிறது. வட்டார மருத்துவ அலுவலர், ஒலக்கூர், அவர்களின் 07.08.2020ம் தேதிய கடிதத்தில் மாண்புமிகு. சட்டம் மற்றும் நீதி துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் திண்டிவனம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 24.07.2020 அன்று மாவட்ட ஆட்சியர்,விழுப்புரம் அவர்கள் முன்னிலையில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வு கூட்டத்தில் ஜெயபுரம் பகுதியில் நகர ஆரம்ப சுகாதார நிலையம் பகுதியில் புதிய கட்டிடம் கட்ட அறிவுரை வழங்கப்பட்டது. தற்போது உள்ள கட்டிடம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட போதுமான வசதிகள் கொண்டதாக இல்லை. மேலும் புதிய கட்டிடம் கட்டுவதற்கு பொது சுகாதாரத் துறையால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் புதிய கட்டிடம் கட்டிக் கொள்வதற்கு தடையின்மை சான்று வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நகர ஆரம்ப சுகாதார நிலையம் பகுதியில் புதிய கட்டிடம் கட்டி மருத்துவ வசதிகளை மேம்படுத்துவதற்கு நகராட்சியால் தடையின்மை சான்று வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

3) திண்டிவனம் நகராட்சி செஞ்சி ரோடு OHT வெளியில் உள்ள எரிவாயு தகன மேடையிலிருந்து எடுத்து வரப்பட்ட மீண்டும் பயன்படுத்த முடியாத பழைய இரும்பு பொருட்கள் , குடிநீர் பிரிவு பழைய இரும்பு பொருட்கள், கூட்டேரிப்பட்டு நீரூந்து நிலையம் வெளியில் உள்ள பழைய MS பைப்கள் மற்றும் நுண்ணுயிர் உர மையத்தில் உள்ள பழைய டம்பர் பின்கள் ஆகிய பொருட்கள் சுமார் 2.5 டன் அளவிற்கு உள்ளது.அவற்றை ஏலம் விடவும் அதற்கான தோராய மதிப்பு ரூபாய் 30000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணிக்கு 13.08.2020 அன்று பொது ஏலம் கோரியதில் பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளி ஏலத்தில் அதிகபட்சமாக கோரப்பட்ட ஏல விபரத்தினை மன்றததின்பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி ஏலதாரர் பெயர் திருவாளர்கள் | கோரப்பட்ட ஏல விபரம் |
|---|---|---|---|
| 1. | செஞ்சி ரோடு OHT வெளியில் உள்ள எரிவாயு தகன மேடையிலிருந்து எடுத்து வரப்பட்ட மீண்டும் பயன்படுத்த முடியாத பழைய இரும்பு பொருட்கள் குடிநீர் பிரிவு பழைய இரும்பு பொருட்கள், கூட்டேரிப்பட்டு நீரூந்து நிலையம் வெளியில் உள்ள பழைய MS பைப்கள் மற்றும் நுண்ணுயிர் உர மையத்தில் உள்ள பழைய டம்பர் பின்கள். | எஸ்.சக்கரவர்த்தி, திண்டிவனம் | ரூ.35000/– + GST 18% |
| | | எஸ். முகமது காசிம், திண்டிவனம் | ரூ.32000/– + GST 18% |

அலுவலககுறிப்பு :–

1. மேற்கண்ட பணிக்கு அரசு மதிப்பு ரூ.30000/–ஆகும். ஒப்பந்தப்புள்ளி ஏலம் கோரியதில் அரசு மதிப்பை விட கூடுதலாக அதிக பட்ச ஏலமாக திரு. எஸ்.சக்கரவர்த்தி ரூ.35000/–க்கு ஏலம் கோரிதை ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

4)இந்நகராட்சி வார்டு–33 ல் அமைந்துள்ள ரோஷணை இந்து ஆரம்ப பள்ளி கட்டிடம் மிகவும் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால் கூடுதல் கட்டிடம் அமைத்து தருமாறு தலைமை ஆசிரியரிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மாணவர்களின் நலன் கருதி புதிய கட்டிடம் அமைக்கவும் அதற்கான தோரய மதிப்பீடு ரூ. 9,90,000/– க்கும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

5)அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 04.05.2017 மற்றும் அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 13.10.2017–ன் படி அவரபாக்கம் கிராமம் சர்வே எண்.12/4பி, ஆகியவற்றில் 0.68 ஏக்கர் (அ) 29620.80 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள **அன்பு நகர்** என்ற அனுமதியற்ற மனைப்பிரிவின் உரிமையாளர் மனைகளை வரன்முறைப்படுத்த ஆன்லைனில் விண்ணப்பித்ததை தொடர்ந்து விழுப்புரம் மண்டலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித நடவடிக்கைகள் ந.க.எண். 2758/2019/விம, நாள். 31.12.2019–ல் அவரபாக்கம் கிராமம் சர்வே எண்.12/4பி, ஆகியவற்றில் 0.68 ஏக்கர் (அ) 29620.80 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள **அன்பு நகர்** என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ / ந.ஊ.உ.இ (வி.ம) எண். R1124/2019 என எண்ணிடப்பட்டு (தன்னிச்சையாக) மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**மனைப்பிரிவு ஒதுக்கீடு விபரம்**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு மொத்த பரப்பளவு | – | 0.68 ஏக்கர் (அ) 29620.80 ச.அடி |
| மொத்த மனைகள் | – | 20 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | – | 4 |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | – | 16 |

**பொது ஒதுக்கீடு**

பூங்கா - 1779.00 ச. அடி (விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவில் 10.07 %)

மேற்படி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது.

மேற்படி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணங்கள் அதாவது மனை எண்கள். 1 முதல் 9, 13 முதல் 15, 17 முதல் 19 ஆகிய 15 மனைகளின் பரப்பளவு 1469 ச.மீட்டர் பரப்பளவிற்கு 1 சதுர மீட்டருக்கு ரூ. 90.00 வீதம் ஆக 1469 ச. மீட்டருக்கு ரூ. 1,32,210/– மனைபிரிவு உரிமையாளரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் வளர்ச்சி கட்டணம் 1 ச.மீட்டருக்கு ரூ. 250.00 வீதம் ஆக 1469 ச. மீட்டருக்கு ரூ. 3,67,250/– நகராட்சி கருவூலத்தில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்த பரிந்துரைத்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமை கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தினை நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1654/2020/எப்1)

**6)**திண்டிவனம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்ட வழிகாட்டுதல் படி வீடு வீடாக குப்பை சேகரிக்கப்படுவதாலும் அதற்காக மின்கலன் பொருத்திய வாகனம் (BOV) பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனால் குப்பை அள்ளுவதற்கு பயன்படுத்தப்பட்டு வந்த TN 32Q 7432 எண்ணுள்ள டம்பர் பிளேசர் லாரி தற்போது பயன்படுத்தாமல் உள்ளது. மேற்படி வாகனத்தை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்கர் பாடி கட்டப்பட்டு வறட்சி காலங்களிலும் மற்றும் தேவையான நேரங்களிலும் குடிநீர் சப்ளை செய்யும் பணிக்கு பயன்படுத்தலாம். இதனால் வறட்சி காலங்களிலும் மற்றும் தேவையான நேரங்களிலும் குடிநீர் சப்ளை செய்ய வாடகைக்கு டேங்கர் லாரி வைப்பதால் ஏற்படும் செலவினம் தவிர்க்கப்படும். எனவே டேங்கர் பாடி கட்டுவது மற்றும் தகுதி சான்று புதுப்பித்தலுக்கான பணி செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ 9,50,000/– க்கும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-** மன்றம் அனுமதிக்கலாம்.

7) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு–27 ஆர்.எஸ்.பிள்ளை தெரு விரிவாக்கம், வார்டு–30 வள்ளலார் தெரு விரிவாக்கம் மற்றும் வார்டு–9 ராஜாஜி தெரு ஆகிய இடங்களில் பகிர்மான குழாய்கள் இல்லாததால் புதியதாக 110mm மற்றும் 140mm PVC பைப் லைன் அமைக்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ 4,60,000/– க்கும் மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**8)**இந்நகராட்சி அரசு மருத்துவமனையில் போதிய தண்ணீர் வசதி இல்லாததால் பழைய நகராட்சி அலுவலக கிணற்றிலிருந்து மருத்துவமனைக்கு புதியதாக பைப்லைன் அமைத்து தொட்டி அமைத்து தண்ணீர் வசதி செய்யவும் அதற்கான தோரய மதிப்பீடு ரூ. 4,00,000/– க்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**9)**இந்நகராட்சி புதிய நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளிலும் போதுமான டேபிள் மற்றும் அலமாரிகள் இல்லாமல் இருப்பதால் புதியதாக டேபிள் மற்றும் அலமாரிகள் வசதி செய்வதற்கும் அதற்கான தோரய மதிப்பீடு ரூ. 5,00,000/– க்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**10)** இந்நகராட்சி பழைய நகராட்சி அலுவலகத்தை கோவிட்–19 பரிசோதனை மையமாக மாற்றுவதற்காக தடுப்புகள் அமைக்கவும் , டைல்ஸ் பதிக்கவும் மற்றும் வண்ணம் பூசவும் வேண்டியுள்ளது. மேலும் நகராட்சி ஆணையர் குடியிருப்பில் புதியதாக கழிப்பறை வசதி அமைத்து குடியிருப்பு கட்டிடத்திற்கு வண்ணம் பூசவும் செய்ய வேண்டியுள்ளது . எனவே மேற்கண்ட பணிகளை செய்யவும் அதற்கான தோரய மதிப்பீடு ரூ. 9,00,000/– க்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

11)இந்நகராட்சி பழைய நகராட்சி அலுவலகம் முன்புறம் ஆட்டோ ஓட்டுநர்கள் ஆட்டோக்களை நிறுத்தி ஆக்கிரமித்து வருகின்றனர். மாவட்ட ஆட்சியர் மற்றும் மாண்புமிகு.சட்டம்,நீதித்துறை ,சிறைத்துறை மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் அவர்களின் நேர் ஆய்வின் போது ஆட்டோக்கள் ஆக்கிரமிப்பை அகற்றி பேவர் பிளாக் கற்கள் பதித்து கிரில் அமைத்து செடிகள் வைத்து பராமரிக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்கண்ட பணியை செய்யவும் அதற்கான தோரய மதிப்பீடு ரூ. 5,00,000/– க்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

12) இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள காவேரிப்பாக்கம் மேல்நிலை பள்ளி, ஆரம்ப பள்ளி, கிடங்கல்–1, முருங்கப்பாக்கம்,அய்யந்தோப்பு,ரோஷணை இந்து நகராட்சி ஆரம்ப பள்ளியில் மாணவர்களுக்கான எழுத்து பலகை மற்றும் விளையாட்டு பொருட்கள் ஆசிரியர்களுக்கான எழுத்து பலகை மற்றும் Smart TV ஆகிய வசதிகளை மாணவர்களின் நலன் கருதி செய்யவும் அதற்கான தோரய மதிப்பீடு ரூ. 9,90,000/– க்கும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

13)இந்நகராட்சி வார்டு–33 ல் அமைந்துள்ள ரோஷணை இந்து ஆரம்ப பள்ளி கட்டிடம் மிகவும் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால் அந்த கட்டிடத்தை இடித்து கட்டிட கழிவுகளை அப்புறப்படுத்தி சலவாதி சாலையில் அமைந்துள்ள கட்டிட கழிவுகள் சேகரிக்கும் இடத்தில் கொட்டுவதற்கும் அதற்கான தோரய மதிப்பீடு ரூ. 3,50,000/– க்கும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

14)இந்நகராட்சி வார்டு–33 ல் அமைந்துள்ள ரோஷணை இந்து நகராட்சி ஆரம்ப பள்ளியில் Smart class வசதிகள் ( மெய்நிகர் உள்கட்டமைப்பு வசதி ) Projector, Table, Chair,Computer,Play Materials, Audio system,Air condition and Painting ஆகிய உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தருமாறு தலைமை ஆசிரியரிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மாணவர்களின் நலன் கருதி மேற்கண்ட பணிகளை செய்யவும் அதற்கான தோரய மதிப்பீடு ரூ. 9,90,000/– க்கும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**15)**இந்நகராட்சி வார்டு–**24** ல் அமைந்துள்ள கிடங்கல்–**1** நகராட்சி ஆரம்ப பள்ளியில் Smart class வசதிகள் ( மெய்நிகர் உள்கட்டமைப்பு வசதி ) Projector, Table, Chair,Computer Audio system,Air condition and Painting ஆகிய உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தருமாறு தலைமை ஆசிரியரிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மாணவர்களின் நலன் கருதி மேற்கண்ட பணிகளை செய்யவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ. **9,90,000/–** க்கும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**16)**இந்நகராட்சி வார்டு–**2** ல் அமைந்துள்ள அய்யந்தோப்பு ஆரம்ப பள்ளியில் Smart class வசதிகள் ( மெய்நிகர் உள்கட்டமைப்பு வசதி ) Projector, Table, Chair,Computer Audio system,Air condition and Painting ஆகிய உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தருமாறு தலைமை ஆசிரியரிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மாணவர்களின் நலன் கருதி மேற்கண்ட பணிகளை செய்யவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ. **9,90,000/–** க்கும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**17)**இந்நகராட்சி வார்டு–**4** ல் அமைந்துள்ள முருங்கப்பாக்கம் ஆரம்ப பள்ளியில் Smart class வசதிகள் ( மெய்நிகர் உள்கட்டமைப்பு வசதி ) Projector, Table, Chair,Computer Audio system,Air condition and Painting ஆகிய உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தருமாறு தலைமை ஆசிரியரிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மாணவர்களின் நலன் கருதி மேற்கண்ட பணிகளை செய்யவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ. **9,90,000/–** க்கும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**18)**இந்நகராட்சி வார்டு–**4** ல் அமைந்துள்ள முருங்கப்பாக்கம் ஆரம்ப பள்ளி கட்டிடம் **(**கிழக்கு பகுதி**)** மிகவும் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால் புதிய கட்டிடம் அமைத்து மற்றும் கழிப்பறை தருமாறு தலைமை ஆசிரியரிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மாணவர்களின் நலன் கருதி புதிய கட்டிடம் அமைக்கவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ. **9,90,000/–** க்கும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

19)இந் நகராட்சிக்கு சொந்தமான செஞ்சி சாலையில் உள்ள ஐ.யு.டி.பி கடை எண் 13 குத்தகை இன விதிப்பு எண் 046/433 என்ற கடை திரு.R.கிருஷ்ணமூர்த்தி என்பவர் குத்தகை எடுத்து நடத்தி வருவதாகவும் அவரால் தொடர்ந்து கடையை நடத்த இயலாமல் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதால் மேற்படி கடையை தனது தம்பி மகன் திரு. ரமேஷ்ராஜை தொடர்ந்து நடத்திக் கொள்ளுமாறும் அதற்காக நகராட்சிக்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகையை தொடர்ந்து செலுத்தவும், குத்தகை உரிமையை திரு. ரமேஷ்ராஜ் என்ற பெயருக்கு மாற்றிக்கொள்ளவும் சம்மதம் தெரிவித்து 07.03.2008ல் திரு.S.ராஜாராம் , BSc, BL வழக்கறிஞர் முன்னிலையில் ரூ.20 மதிப்புள்ள பிரமான பத்திரத்தில் கையொப்பமிட்டு வழங்கியுள்ளார்கள். மேற்படி மனுவிற்குரிய அரசாணை எண் 92 நாள். 03.07.2007 ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அனுமதியற்ற அனுபோதகரின் நேர்வில் ஒரு முறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை பெயர் மாற்றம் செய்ய 12 மாத வாடகைக்கு சமமான தொகையை மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி தொகையை சேர்த்து முன் பணமாகவும் ரூ.8142 X 12= 97704 மற்றும் பெயர் மாற்றக் கட்டணம் ரூ.5000, விண்ணப்பக் கட்டணம் ரூ.500 ஆக மொத்தம் ரூ.103204/ – செலுத்த இவ்வலுலவ அறிவிப்பு கடிதம் ந.க.எண்.1538/2019/அ1 நாள்.26.12.19 மற்றும் 10.08.2020ம் தேதிய அறிவிப்புக் கடிதத்தில் தெரிவித்துள்ளப்படி மனுதாரர் அவர்களால் மேற்படி தொகை 21.08.2020ல் நகராட்சி கருவூல ரசீது எண். 0002022ல் செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி நகராட்சிக்கு சொந்தமான செஞ்சி சாலையில் உள்ள ஐ.யு.டி.பி கடை எண் 13 (குத்தகை இன விதிப்பு எண் 043/433 ) திரு. R.கிருஷ்ணமூர்த்தி என்ற பெயரிலிருந்து திரு. K.ரமேஷ்ராஜ் என்ற பெயருக்கு குத்தகை பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குத்தகைதாரர் உடல்நிலை சரியில்லாத காரணத்தை கருத்தில் கொண்டு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் செலுத்தியுள்ளளால் குத்தகை இனத்தினை பெயர் மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1538/2019/அ1)

20) இயக்குனர்( FAC), தமிழ்நாடு நகரவியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் ந.க.எண்.276/2020/அ2, நாள்18.08.2018 தேதியிட்ட கடிதத்தில் கோரியுள்ளதற்கிணங்க, இந்நகராட்சியின் 2020–2021ம் ஆண்டிற்கான ஆண்டுச்சந்தா தொகை ரூ.90,000/–ஐ (ரூபாய் தொண்ணுாறாயிரம் மட்டும்) கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரவியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u> வருவாய் நிதியிலிந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 50 /2020/ சி1)

**21)** நகரில் குப்பைகளை அகற்றப்பயன்படுத்தப்படும் வாகனம் TN 16 6438 Tata Ac வாகனத்திற்கு LRN35SF புதியதாக பேட்டரி ஒன்று சப்ளை செய்ய **26.08.2020** அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் மீது முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | ஒரு கைதெளிப்பான் விலை |
|---|---|---|
| **1** | கிருஷ்ணா பேட்டரி சேல்ஸ் & சர்விஸ்<br>எண்.**54/32**சி, மைலம் ரோடு,திண்டிவனம் | ரூ.**6200/–** |
| **2** | ஈஸ்வரி பேட்டரி<br>எண்.**117**, செஞ்சி ரோடு,திண்டிவனம். | ரூ.**6300/–** |
| **3** | செந்தில் பேட்டரி சர்வீஸ்<br>எண்.**2**/எ**1**, ஜி.எஸ்.டி ரோடு, திண்டிவனம். | ரூ.**6000/–** |

**அலுவலக குறிப்பு**

மேற்கண்டவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண். **3**–ல் உள்ள செந்தில் பேட்டரி சர்வீஸ் **2**, எ/**1**, ஜி.எஸ்.டி. ரோடு, திண்டிவனம் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள விலைப்புள்ளி குறைவாகவும் உள்ளதால் அவற்றினை ஏற்று சப்ளை செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1036 /2020/எச்1)

22)இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2020–21 (TURIP)யின் கீழ், நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை–28 அவர்களின் நிர்வாக அனுமதி உத்தரவு எண் : 9025/2020/E3 நாள் : 17.07.2020 படி, 18.08.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் ONLINE ல் ஒப்பந்தப்புள்ளி எதுவும் வரப்பெறவில்லை. OFFLINE ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றததின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை **(ரூ.லட்சத்தில்)** | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு–15 மொட்டையன் தெரு, வார்டு–31 வசந்தபுரம் மெயின் ரோடு, வார்டு–8 பஜனை கோயில் தெரு, வார்டு–7 வேப்பஞ்சாலை தெரு, வார்டு–32 குட்டியப்பன் தெரு, வார்டு–4 ஆலன் தெரு(பாரதிதாசன் நகர்) ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைப்பது மற்றும் வார்டு–12 சேடன்குட்டை குறுக்கு தெரு ,வார்டு–26 பாரதிதாசன் பேட்டை ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் அமைக்கும் பணி **– சிப்பம் – 4** | **97.00** | T.K . குமார் | + 4.90% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| | | | T.அன்பழகன் | + 6.00% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

அலுவலககுறிப்பு :–

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு T.K . குமார், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2) மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட கூடுதல் சதவீதம் **4.90** % க்கும் அதற்கான கூடுதல் செலவினத்திற்க்கும் அதனை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

23)இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2020–21 (TURIP)யின் கீழ், நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை–28 அவர்களின் நிர்வாக அனுமதி உத்தரவு எண் : 9025/2020/E3 நாள் : 17.07.2020 படி, 18.08.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் ONLINE ல் ஒப்பந்தப்புள்ளி எதுவும் வரப்பெறவில்லை. OFFLINE ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றததின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை **(ரூ.லட்சத்தில்)** | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு–23 இந்திரா நகர் குறுக்கு தெரு, கற்பகவிநாயகர் கோயில் தெரு, வார்டு–24 முத்துகிருஷ்ணன் தெரு , வார்டு–25 பூதேரி ரோடு, வார்டு–26 பிள்ளையார் கோயில் தெரு, வார்டு–29 சர்க்கார் தோப்பு மற்றும் என்.ஜி.ஓ.காலனி ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி **– சிப்பம் – 2** | 100.00 | T.K . குமார் | + 4.90% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| | | | T.அன்பழகன் | + 6.00% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

அலுவலககுறிப்பு :–

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு T.K . குமார், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட கூடுதல் சதவீதம் 4.90 % க்கும் அதற்கான கூடுதல் செலவினத்திற்க்கும் அதனை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

24)இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2020–21 (TURIP)யின் கீழ், நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை–28 அவர்களின் நிர்வாக அனுமதி உத்தரவு எண் : 9025/2020/E3 நாள் : 17.07.2020 படி, 18.08.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் ONLINE ல் ஒப்பந்தப்புள்ளி எதுவும் வரப்பெறவில்லை. OFFLINE ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றததின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை **(ரூ.லட்சத்தில்)** | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு–33 முஸ்லிம் தெரு, வார்டு–27 ஆர்.எஸ்.பிள்ளை தெரு, ஆர்.எஸ்.பிள்ளை குறுக்கு தெரு, உமர்சாகிப் தெரு, கசாமியான் தெரு, வார்டு–14 நேருவீதி பூந்தோட்டம், நேருவீதி பூந்தோட்டம் குறுக்கு தெரு, வார்டு–3 ரோஷணை ஆஸ்பிட்டல் மெயின்ரோடு, வார்டு–30 ராஜாங்குளம் இறக்கம் முதல் சஞ்சீவிராயன்பேட்டை மெயின் ரோடு வரை, வார்டு–11 வாணிய பிள்ளையார் கோயில் தெரு,அப்பாய் தெரு மற்றும் வார்டு–13 கீரைக்கார தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி– **சிப்பம் – 111** | 105.00 | தீபம் கண்ஸ்ட்ரக்ஷன் | + 4.90% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| | | | T.அன்பழகன் | + 6.00% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

அலுவலககுறிப்பு :–

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு தீபம் கண்ஸ்ட்ரக்ஷன், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2) மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட கூடுதல் சதவீதம் 4.90 % க்கும் அதற்கான கூடுதல் செலவினத்திற்க்கும்அதனை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**25)**இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் **2020–21** (TURIP)யின் கீழ், நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை–**28** அவர்களின் நிர்வாக அனுமதி உத்தரவு எண் : **9025/2020/E3** நாள் : **17.07.2020** படி, **18.08.2020** அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் ONLINE ல் ஒப்பந்தப்புள்ளி எதுவும் வரப்பெறவில்லை. OFFLINE ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றததின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை **(ரூ.லட்சத்தில்)** | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| **1.** | வார்டு–**1** ராஜகோபால் நகர், பிள்ளையார் கோயில் தெரு, வார்டு–**5** அப்புகுட்டி தெரு, அய்யாசாமி தெரு, வார்டு–**16** டிவி நகர், டிவி நகர் குறுக்கு தெருக்கள்,வகாப் நகர், வார்டு–**20** காமராஜர் தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி **– சிப்பம் – 1** | **106.00** | T.K . குமார் | + **4.90%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| | | | T.அன்பழகன் | + 6.00% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

அலுவலககுறிப்பு :–

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு T.K . குமார், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட கூடுதல் சதவீதம் **4.90** % க்கும் அதற்கான கூடுதல் செலவினத்திற்க்கும் அதனை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**26)**இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து இடங்களிலும் மாவட்ட ஆட்சியர்,விழுப்புரம் அவர்களின் அறிவுரைப்படி கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் கிருமி நாசினி மருந்து தெளிப்பதற்கு தேவையான வாடகை வாகனம் (வாடகை, டிசல் மற்றும் டிரைவர் சம்பளம் உட்பட) அமர்த்தப்பட்டு **26.04.2020** முதல் **30.06.2020** வரை பணிகள் செய்து முடிக்கப்பட்டதற்கு நகராட்சி சட்ட விதி **15**ன் கீழ் SDRF **2019–20** (covid–**19**) நிதியில் ரூபாய் **9,90,600/–**செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

பதிவு செய்யலாம்.

27)இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.1670/2010/இ1 நாள்.10/08/2017 தேதிய பணி உத்தரவின்ன்டி M/S M.H.T. எஞ்சினியரிங் நிறுவனத்திற்கு திண்டிவனம் நகராட்சி எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணிகளுக்காக 10.08.2017 தேதி முதல் வழங்கப்பட்டது. எனினும் அந்நிறுவனம் ஜனவரி–2018 முதல் பராமரிப்புபணிகள் செய்து வருகிறது. தற்போது 09.08.2020 உடன் ஒப்பந்தம் காலாவதியாக உள்ளது. அந்நிறுவனம் நல்ல முறையில் பராமரிப்பு பணிகளை செய்து வருவதாக துப்புரவு அலுவலர் சான்றளித்திருப்பதாலும் குறைந்த கட்டணத்தில் பிரேதங்களை எரியூட்டி பொதுமக்கள் நல்ல முறையில் பயனடைந்து வருவதாலும் 10.08.2020 முதல் 10.11.2020 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அதே கட்டண விகிதங்களில் ஒப்பந்த நீட்டிப்பு செய்து கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1670/2015/எச்1)

28) இந்நகராட்சியில் அனைத்துப் பிரிவுகளுமே கணினி மயமாக்கப்பட்டு விட்டது. அனைத்துப் பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும் பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் பயன்பாடு அதிகமாக உள்ளது. ஒவ்வொரு பிரிவுகளிலும் கணினியில் Typing செய்வதை Print எடுப்பதற்கும், சொத்துவரி, தொழில்வரி, கடைவாடகை மற்றும் குடிநீர் வரி அறிவிப்பு நோட்டீஸ்கள் பிரிண்ட் எடுப்பதற்கும் IHHL மற்றும் Animators போன்ற பிரிவுகளிலும் கொரானா பணிகளுக்கு தேவையான புள்ளி விவரங்களை எடுப்பதற்கும் டோனர் பயன்பாடு அதிகமாக உள்ளது.

எனவே, 2020–2021ம் ஆண்டுக்கு தேவையான டோனர்கள் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் தேவைக்கேற்ப வாங்கிட அனுமதிக்கும், The George Town Multi Purpose Industrial Co-operative Society Ltd., தாம்பரம் கூட்டுறவு சொசைட்டி நிறுவனத்திடமிருந்து டோனர்கள் வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> –** 1) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2)அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் , தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2297/2020/பி2)

29)இந்நகராட்சியில் வார்டு எண் 16–ல் மனுதாரார் திரு பெருமாள் த/பெ பட்டாபி என்பவரின் மனு மீது கள ஆய்வு செய்யப்பட்டதில் மனதாரர் கோரியுள்ள RCC தரைதளம் (ம) முதல் தளம் கொண்ட குடியிருப்பு கட்டிடத்திற்கு கடந்த 2007–08 ம் நடந்த சொத்துவரி பொது சீராய்வின் போது மேற்படி சொத்துவரி விதிப்பு எண்ணிற்கு (043/016/00214, ப.எண்043/37212 ) அரையாண்டிற்கு ரூ–2244/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சொத்துள்ள அதே இடத்தில் பழைய ஓட்டு வீடு இருந்து அதற்கு சொத்துவிதிப்பு எண் 043/2048 அரையாண்டிற்கு ரூ.170/– என நிர்ணயம் செய்யப்பட்டிருந்த பழைய கட்டிடத்தை இடித்து விட்டு அதற்கு மாறாக மேற்படி குடியிருப்பு கட்டிடம் கட்டப்பபட்டுள்ளது. பழைய சொத்துவரி விதிப்பு எண் 043/2048 –ஐ நீக்கம் செய்யமாலேயே புதிய சொத்துவரி விதிப்பு நிர்ணயம் செய்துள்ளனர். எனவே ( மேற்படி கட்டிடத்தின் சொத்து வரியை பழைய சொத்துவரி விதிப்பு எண் 043/2048 புதிய வரி விதிப்பு எண் 043/016/00283 ) 2020–21ம் ஆண்டில் உள்ள நிலுவை தொகை ரூ120/– ஐ நீக்கம் செய்யவும், மேற்படி சொத்து வரி விதிப்பு 043/2048 –ஐ எண்ணை கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி சொத்துவரி விதிப்பு எண்.043/2048–க்குரிய கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக கட்டிடம் கட்டி அதற்கு 043/016/00214–ல் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் பழைய சொத்துவரி எண் 043/2048 கேட்பிலிருந்து நீக்கம் செய்யலாம்.

3.புதிய சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள காலம் வரை 043/2048–க்கு நிலுவையின்றி செலுத்தியுள்ளதால் அதன்பிறகு ஏற்பட்டுள்ள நிலுவை தொகையை தள்ளுபடி செய்யலாம்.

(ந.க.எண் 471/2020)

**நகராட்சி அலுவலகம்** **தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**

**நாள்:- 31.08.2020** **திண்டிவனம் நகராட்சி.**